# அரையாண்டுத் தேர்வு - 2022

வகுப்பு - 10

காலம் : 3.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள் : 100

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15 x 1 = 15

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
   அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா
2. *பெரிய மீசை சிரித்தார்* - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
3. 'சிலம்பு அடைந் திருந்த பாக்கம் எய்தி ' - என்னும் அடியில் பாக்கம் என்பது
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
4. ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனின் பெயர்
   அ) வாட்சன் ஆ) பெப்பர் இ) எந்திரன் ஈ) இலர்
5. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ......, இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் .........
   அ அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன் இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்
6. ஆறு பெரும் பொழுதுகள் - பெரும் திணை
   அ) மருதம், நெய்தல் ஆ) முல்லை, பாலை இ) குறிஞ்சி, முல்லை ஈ) குறிஞ்சி, பாலை
7. தமிழனத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
8. சமயக் கலப்பில்லாதா மானிட அறம் இயல்பாக நிலவிய காலம்
   அ) தற்காலம் ஆ) கற்காலம் இ) சுங்க காலம் ஈ) இடைக்காலம்
9. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
10. *வாய்மையே மழைநீராகி* - இத்தொடரில் வெளிப்படும் அணி
    அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்
11. தமிழின் முதல் அகராதியான சதுரகாராதியை எழுதியவர்
    அ) சீத்தலைச் சாத்தனார் ஆ) வீரமாமுனிவர் இ) ஜெயகாந்தன் ஈ) நாகூர்ரூமி
12. பாடலைப் படித்து வினாவிற்கு விடையளி

    விசும்பில் ஊழிஊழ்ஊழ் செல்லக்
    கருவளர் வானத்தி இசையில் தோன்றி
    உருஅறிவாரா ஒன்றன் ஊழியும்
    உந்துவளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்

    இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல்
    அ) மலைபடுகடாம் ஆ) பெருமாள் திருமொழி இ) பரிபாடல் ஈ) திருவிளையாடற்புராணம்
13. இப்பாடலை எழுதிய ஆசிரியர்
    அ) பரஞ்ஜோதி முனிவர் ஆ) கீரந்தையார் இ) குலசேகராழ்வார் ஈ) கம்பர்
14. *ஊழ் ஊழ்* - இலக்கணக் குறிப்பு தருக.
    அ) இரட்டைக் கிளவி ஆ) அடுக்குத்தொடர் இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை
15. ஊழி என்பதன் பொருள் யாது?
    அ) யுகம் ஆ) வானம் இ) முறை ஈ) கதை

**ஆ. எவையேனும் நான்கினுக்கு மட்டும் விடையளி.** 4 x 2 = 8

**(வினா எண்.21 கட்டாய வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்)**

16. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்கு தனித்த இடமுண்டு.

ஆ) ஒரு நாளின் ஆறு கூறுகளைச் சிறுபொழுது என்று பிரித்துள்ளனர்.

17. வசன கவிதை - குறிப்பு வரைக.

18. இறடிப் பொம்மல் பெறுகுவிர் - இத்தொடர் உணர்த்தும் பொருள் யாது?

19. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்தது யாது?

20. உரைப்பாட்டு மடை என்பது யாது?

21. 'செயல்' - என முடியும் குறட்பாவை எழுதுக.

**இ. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5 x 2 = 10

22. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகை நிலைத்தொடர்களை விரித்து எழுதுக? தொடரில் அமைக்க?

23. தொடரில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க?

அ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும். ஆ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்

24. பின்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளை திருத்தி எழுதுக.

அ) உழவர்கள் மலையில் உழுதனர் ஆ) முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாரே பரதபர் கடலுக்குச் சென்றனர்

25. கலவைச் சொற்றொடராக மாற்றுக.

கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார் ; கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

26. கலைச்சொல் தருக. அ) Terminology ஆ) Patent

27. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

28. உவமையைப் பயன்படுத்தி சொற்றொடர் உருவாக்குக? 'இலைமேல் எழுத்து போல'

**ஈ. எவையேனும் இரண்டினுக்கு விடையளி.** 2 x 3 = 6

29. ஹிப்பாலஸ் பருவக்காற்றை விளக்குக?

30 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' – இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

31. வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை 'பொய்யாச் செந்நா', 'பொய்படுபறியா வயங்கு செந்தா' என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசயத்திறவு கோல் என்பர். இன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான் துன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான்.

அ) சிறந்த அறமாக இலக்கியங்கள் குறிப்பிடுவது யாது? ஆ) அதிசயத் திறவுகோல் எது?

இ) இப்பகுதிக்குத் தலைப்பு தருக.

**உ. எவையேனும் இரண்டினுக்கு விடையளி. வினா எண்.34 கட்டாய வினா.** 2 x 3 = 6

32. 'மாளாத காதல் நோயாளன் போல்' – என்னும் தொடரில் உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

33. தேம்பாவணி – குறிப்பு வரைக.

34. 'வெய்யோன்' – எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல் (அல்லது)

'அருளை' – எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல்

**ஊ. எவையேனும் இரண்டினுக்கு விடையளி.** 2 x 3 = 6

35. புறத்திணைகள் குறித்து விளக்குக.

36. பின்வரும் குறட்பாவை அலகிடுக.

``கொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்

சொல்லப் பயன்படும் கீழ்''

37. தற்குறிப்பேற்றணியை விளக்குக.

எ. பின்வரும் வினாவிற்கு விடையளி. 5 x 5 = 25

38. அ. மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு உருவாக்குக. (அல்லது)

ஆ. பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

39. அ. பொருட்காட்சிக்கு சென்று வந்த நிகழ்வு பற்றி நண்பனுக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ. உங்கள் பகுதிக்கு மின்சார வசதி வேண்டி செயற்பொறியாளருக்கு கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவிதையாக்குக.



41. அன்பரசன் என்பவரது மகன் இளமாறன் பத்தாம் வகுப்பில் 420 / 500 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். அவரது மேல்நிலைப் வகுப்பு சேர்க்கை விண்ணப்பத்தை நிரப்புக.

---

**மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண் : நாள் : வகுப்பும் பிரிவும் :

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி:

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ / மாணவியின் கையெழுத்து

42. அ. மொழி பெயர்க்க.

i) Education is what remains after one has forgotten when one has learned in School. (Albert Einstein)

ii) Success is not final, failure is not final. it is the courage in continue that counts. (Winsten Churchil)

(அல்லது)

ஆ.நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும், மென்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விருப்பனவற்றை வரிசைப்படுத்துக.

**ஏ. பின்வரும் வினாவிற்கு விடையளி.** **3 x 8 = 24**

43. அ. ஒரு குழந்தையைத் தூக்கவும், கீழே விழுந்த ஒரு தேனீர் கோப்பை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? பெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்தை ஒட்டி செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி கட்டுரை வரைக. (அல்லது)

ஆ. சங்க இலக்கிய அறங்கள் குறித்து கட்டுரை எழுதுக.

44. அ) அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப்பயணம் என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.

45. விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் எனும் தலைப்பில் கட்டுரை வரைக? (அல்லது)

முன்னுரை – உயிர் நீர் – சேமிப்பின் தேவை – சேமிக்கும் முறைகள் – மழைநீரின் பயன்கள் – முடிவுரை. இத்தலைப்பு கொண்டு மழைநீர் சேமிப்பு குறித்து கட்டுரை வரைக.

---